## தேசிய நெடுஞ்சாலைகள் துறைச் செயற்திட்டம் - 2015

தேசிய நெடுஞ்சாலைகள் துறைச் செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைசாத்திடப்பட்ட 2006 திசெம்பர் 14 ஆந் திகதிய 2217 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 6 ஆம் பட்டோலையின் 34 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சாகவிருந்த தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. தேசிய நெடுஞ்சாலைகள் வலையமைப்பு வினைத்திறனை முன்னேற்றுதல் மற்றும் வீதித்துறை நிறுவனங்களை வலுப்படுத்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 23,760 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 216 மில்லியனானதுடன் அதில் ரூபா 16,500 மில்லினிற்கு சமமான ஐ.அ.டொலர் 150 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. 2008 பெப்ரவரி 15 இல் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இலங்கை அரசாங்கத்தால் புரிந்துணர்வு விஞ்ஞாபனமொன்று கைச்சாத்திடப்பட்டதுடன் மூல கடன் தொகைக்குள் செயற்திட்டத்தின் நோக்கெல்லையை மாற்றுவதற்கு 2008 மே 27 இல் கடன் உடன்படிக்கையானது அதற்கிணங்க திருத்தப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்டதற்கு மேலதிகமாக, 2010 ஒக்தோபர் 04 இல் பொருளாதார அபிவிருத்திக்கான ஓபெக் (OPEC) நிதியத்துடன் இலங்கை அரசாங்கத்தால் 1355 பி இலக்க வேறு கடன் உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருந்ததுடன் பொருளாதார அபிவிருத்திக்கான ஓபெக் நிதியத்தால் ரூபா 880 மில்லயனிற்கு சமமான ஐ.அ.டொலர் 8 மில்லியன் இச் செயற்திட்டத்தினூடாக நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகள் 2006 ஏப்ரல் 07 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கபட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பொருளாதார அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தின் நிதியளிப்பு ஒழுங்கமைப்புக்கள் 2015 யூன் 30 அளவில் மூடப்பட்டிருந்தது. எனினும், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை

பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1. அபிப்பிராயம்**

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு**

நெடுஞ்சாலைகள் செயலகத்திற்காக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்திற்கான மின்சாரம், நீர், பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்பு கட்டணங்கள் போன்றவற்றின் கிரயங்களை ஈடுசெய்வதற்காக செயற்திட்டத்தால் செலவிடப்பட்ட ரூபா 3.90 மில்லியன் தொகை மூலதனக் கிரயமாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

**3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1 நிதிகளின் பயன்பாடு**

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான குறிப்பிடத்தக்க சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2015 ஆம் ஆண்டின் போது | | 2015 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் |
| ஏடிபீ | 150.00 | 16,500 | - | - | 150.00 | 17,272 |
| ஓஎவ்ஐடி | 8.00 | 880 | - | - | 8.00 | 928 |
| இலங்கை அரசாங்கம் | 58.00 | 6,380 | 6.79 | 964.39 | 64.04 | 9,090 |
| | **216.00** | **23,760** | 6.79 | 964.39 | **222.04** | **27,290** |

## 3.2. பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டத்தின் அமுலாக்கல் திட்டத்தின் பிரகாரம், 06 தேசிய வீதிகளை புனரமைப்பதற்கும் நெடுஞ்சாலைகள் செயலக கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கும் செயற்திட்டத்தால் எதிர்பார்க்கப்பட்டது. பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்டத்தால் சகல வீதிப் புனரமைப்பு வேலைகளும் 2014 திசெம்பர் 31 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயலக கட்டிடத்தின் கட்டம் III இன் நிர்மாண வேலைகள் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பில் 2015 திசெம்பர் 31 வரை தொடரப்பட்டிருந்தது.

## 3.3. ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நெடுஞ்சாலைகள் செயலக கட்டிட நிர்மாணத்திற்கான ஒப்பந்தமானது கட்டிடத்தின் சகல எட்டு மட்டங்களிலும், முதலாவது மூன்று மட்டங்களை பூர்த்தியாக்குவதற்கு 2010 ஆகஸ்ட் 17 இல் ரூபா 599.30 மில்லியன் கிரயத்தில் தனியார் தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2011 நவம்பர் 04 அளவில் பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மூன்று மட்டங்களின் நிர்மாண வேலைகளின் 90 சதவீதம் பூர்த்தியாக்கிய காலத்தில், ரூபா 568.14 மில்லியன் மேலதிக கிரயத்தில் அதே ஒப்பந்தகாரருக்கு முதல் ஒப்பந்தத்தின் முரண் ஒன்றாக ஏனைய ஐந்து மட்டங்களின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. மேலும், செயற்திட்டக் கண்காணிப்புப் பிரிவு ரூபா 795.72 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் மேலும் இரண்டு மட்டங்களினால் கட்டிடத்தை விரிவாக்குவதற்காக 2012 யூன் மாதத்தில் தீர்மானித்திருந்தது. ஆகையால், பத்து மட்டங்களை கொண்டுள்ள கட்டிடத்தின் மொத்த எதிர்பார்க்கப்பட்ட கிரயம் ரூபா 2,506.54 மில்லியனாக இருந்தது. மேற்குறிப்பிட்ட அனைத்து மட்டங்களிற்கான அமைச்சரவையின் அங்கீகாரம் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்புகளிலிருந்து மேலதிக கிரயத்தை மேற்கொள்வதற்காக பெறப்பட்டிருந்தது. அவற்றின் மீது மேலும் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிர்மாண வேலைகளின் நோக்கெல்லையில் செய்யப்பட்ட மாற்றங்கள் வழமையாக செய்யப்பட்டிருந்ததுடன், கட்டிடத்தின் கட்டம் III இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட மேலதிக நிர்மாண வேலைகள் மீது 13 சதவீதம் முதல் 68 சதவீதம் வரையான வீச்சில் வேறுபட்ட வீகிதங்களை பிரயோகிப்பதற்கு அத்தகைய நடைமுறைகள் அனுமதிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) ஜெனரேட்டர், நிலத்தடி எரிபொருள் தொட்டி, தரவு வலையமைப்பு, சேர்வர் (server) முறைமைகள், மின்தூக்கி மற்றும் வளிப் பதனாக்கி முறைமை போன்ற பல துணைப்பாகங்கள் ஒப்பந்தக்காரரூடாக ரூபா 495.39 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அத்தகைய உருப்படிகள் மூல அளவீட்டுப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்காமையால் கட்டிடத்தின் நிர்மாணத்திற்கான பிரதான ஒப்பந்தத்திற்கான முரணாக கருதப்பட்டிருந்தது. ஆகையால், மேந்தலை, பொருத்துதல் கட்டணங்கள் மற்றும் இலாப எல்லைகள் போன்றவற்றின் மீது 35 சதவீதம் வரை மேலதிகக் கட்டணங்களை கோருவதற்கு ஒப்பந்தக்காரர் அனுமதிக்கப்பட்டிருந்தார். இதற்கு மேலதிகமாக, கார் தரிப்பிட நோக்கங்களிற்கான இடைவெளி திட்டமிடப்பட்டிருக்காததுடன் அந்த நோக்கத்திற்காக மேலதிக இடம் வழங்கப்படவேண்டியிருந்தது.

(iii) ரூபா 259.42 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட தரவு வலையமைப்பு முறைமை, சேவர் (server) முறைமை, பொது முன்வைத்தல் முறைமை, மின்சார ஸ்தாபிப்பு, வளிப்பதனாக்கி முறைமை, மின்தூக்கி போன்ற கட்டிடங்களின் பல உபகரணங்கள் மற்றும் பொருத்திகளின் குறைபாடுகள் கணக்காய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட கள விஜயத்தின் போது அவதானிக்கப்பட்டது. எனினும், அத்தகைய உபகரணம் மற்றும் பொருத்திகள் நிர்மாண தளத்தில் நீண்டகாலமாக விளைவற்றிருந்தமையாலும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உத்தரவாத காலம் காலவாதியாகியிருந்தமையாலும் குறைபாடுகளை திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படமுடிந்திருக்கவில்லை என மேலும் அவதானிக்கப்பட்டது.

(iv) 2012 நவம்பர் 17 இன் சீ/369/10/எச்எஸ்பீ-எச்ஓ/2013 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் கட்டிடத்தின் கட்டம் III இன் கீழ் நிர்மாண வேலைகளிற்காக உடன்பட்ட தொகையைவிட ஏதாவது மேலதிக கோரிக்கைகளை சமர்ப்பிக்காதிருப்பதற்கு ஒப்பந்தகாரர் உடன்பட்டிருந்த போதிலும் ரூபா 6.14 மில்லியன் கூட்டுமொத்தமான மேலதிக கோரிக்கைகள் வேலைத்தளத்தில் இருந்த தொழிலாளர்கள் மற்றும் பொருட்கள் மற்றும் போக்குவரத்துக் கட்டணங்கள் போன்றவற்றிற்காக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(v) ஒப்பந்த உடன்படிக்கையின் 14.10 ஆம் உட்பிரிவின் பிரகாரம், ஒப்பந்த காலப்பகுதியின் இறுதியில் பூர்த்தியாக்கல் கூற்றை ஒப்பந்தகாரர் சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கல் கூற்றினை சமர்ப்பிக்காமல் ரூபா 2,057 மில்லியன் பெறுமதியான இறுதி சிட்டையை சமர்ப்பித்திருந்தார்.

**(ஆ)** செயலக கட்டிடத்திற்கான உள்ளக வடிவமைத்தல் வேலைகளுக்கான ஆலோசனை ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதற்காக ரூபா 21.03 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. ஆலோசனை ஒப்பந்தத்தில் வேண்டப்பட்டவாறு அமைவிடத் திட்டம் மற்றும் தேவையான வரைபடங்களை ஆலோசனையாளர் சமர்ப்பித்திருக்கவில்லை. எனினும், தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்குவதற்கான ஒப்பந்தம் 2015 பெப்ரவரி 17 இல் ரூபா 87.13 மில்லியன் கிரயத்தில் ஏனைய தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அமைவிட திட்டமின்மை காரணமாக ஒப்பந்தகாரரால் 2016 ஏப்ரல் 30 இலும் பூர்த்திசெய்ய முடிந்திருக்கவில்லை. மேலும் அரசாங்க கொள்வனவு வழிகாட்டியின் 8.13.4 ஆம் பந்திக்கு முரணாக தளபாடம் வழங்குதல்

மீதான ரூபா 26.73 மில்லியன் முரண்கள், கட்டிடத்தின் 06 அடுக்குகளிற்கான உட்கூரைகளை வழங்கி பொருத்துதல் மீதான ரூபா 39.63 மில்லியனான ஏனைய முரண்கள் என்பன செயற்திட்ட பணிப்பாளரால் அங்கீகரிக்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது.

3.4 **செயற்திட்ட நடவடிக்கைகளை முடிவுறுத்துதல்**

2015 யூன் 30 இல் உள்ளவாறு கடனளிக்கும் முகவர்களின் நிதியளித்தல் ஒழுங்குகள் முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அமுல்படுத்தல் முகவருக்கு மாற்றிய பின்னர் முடிவுறுத்தல் கணக்குகளை தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.